DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.347/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சாமிதுரை (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 22.01.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பெரியசோளகண்ணிப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது சகோதரரின் மகன்கள் ஆவார்கள். **(**சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்**.)**

எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே எனது வீடு இருக்கும் இடத்தில் எல்லை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. இருவருக்கும் நடுவில் இருக்கும் இடத்தில் பெலிகற்கல் நட்டுவைத்தால் ஆஜர் எதிரிகள் அதை பிடுங்கி எரிந்து விடுவார்கள். இரண்டு, மூன்று முறை அதுபோலவே ஆஜர் எதிரிகள் பொலிக்கல்லை பிடுங்கிவிட்டார்கள். 12.04.2025ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் பிடுங்கப்பட்ட பொலிகல்லை திரும்ப நான் நட்டுவைத்து மாடு மேய்ப்பதற்காக சென்றுவிட்டேன்.

ஆஜர் எதிரிகள் இருவரும் பொலிகற்கலை பிடுங்கிவிட்டு கம்பி மற்றும் தடியை

வைத்துக்கொண்டு எனது மனைவி சாட்சி - 2 ராஜம்மாள் இடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். இதை பார்த்த நான் அங்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் என்னை பொட்டகூதி, கோயா கொம்மா என்று திட்டி ஆஜர் எதிரி ஆனந்த் மூங்கில் கம்பால் எனது தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். நான் கீழே விழுந்துவிட்டேன் எனக்கு தலையில் இருந்து ரத்தம் வந்துகொண்டிருந்தது.

என்னை சிகிச்சைக்காக செம்மேடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேல் சிகிச்சைக்காக நான் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மூன்று நாட்கள் நான் அங்கு உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**